II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 337/2023**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 27.03.2025.

| | | | |
|---|---|---|---|
| Name | : Manjula | Age | : |
| Father's / Husband's Name | : | Taluk | : |
| Village | : | | |

முதல் விசாரணை=

நான் வழக்கின் வாதி. என்னுடைய பிரமாணப் பத்திரத்தினை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. பிரமாணப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

1. 23.04.2003 தேதியிட்ட ஆவடி சார்பதிவாளர் அலுவகத்தில் 1ம் பிரதிவாதியால், 2ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.1.

2. 20.12.2020 தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.த.சா.ஆ.2

3. அதை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டைகள் (4 எண்ணிக்கைகள்) வா.த.சா.ஆ.3.

பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகின்றேன்.

(அறிவார்ந்த 1, 2, 4 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)